(10) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

335. தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு வெட்டுமரம் அனுப்புகை விதிகளின் 3ஆவது விதியில் திருத்தமொன்று செய்வது குறித்து வன-மீனளத்துறையின் 17—1—1977 ஆம் தேதியிடப்பெற்ற 42 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு காடுகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-A பிரிவின் கீழ்% பேரவை முன் வைக்கப்பெற்றது.)

336. கதர் கிராமத்தொழில் ஆணைக்குழு அல்லது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், சென்னையிலுள்ள 'கிராமோதய பவன்' ஆகிய இவைகளால் சான்றளிக்கப்பெற்ற நிறுவனங்கள், அதன் பண்டகசாலைகள் அல்லது நபர்களால்பட்டு, பருத்தி வாங்குவதன் மீது தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ்% செலுத்தத்தக்க வரியினைப் பொறுத்தவரையில் விலக்களிப்பது குறித்து, வணிகவரிகள், சமய அறக்கட்டளைகள் துறையின் 25—2—1978 ஆம் தேதியிடப்பெற்ற 228 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது).

337. கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருந்துகிற 1949 ஆம் ஆண்டு வங்கி ஒழுங்கு முறைச் சட்டத்தின் விதித்துறைகளின்கீழ் தொடக்கக் கூட்டுறவு வங்கியாகச்செயல்படுகிற, சென்னையிலுள்ள ஆயுள் ஈட்டுறுதிக் கழகப் பணியாளர் கூட்டுறவு வங்கி (வரையறுக்கப்பெற்றது) சென்னையில் சீட்டு நிதித்தொழில் நடத்துவதற்கு தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தில் அதன் 3 வது பிரிவு நீங்கலான ஏனைய விதித்துறைகள் அனைத்திலிருந்தும் விலக்களித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 15—2—1978 ஆம் தேதியிடப்பெற்ற 182 ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1961) 63(4) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது.

338. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (வரையறுக்கப்பெற்றது) 1974—75 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் ஆய்வுரையும் ஐந்தாவது ஆண்டு அறிக்கையும் கணக்குகளின் விவர அறிக்கையும் (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்(மத்தியச் சட்டம் 1/1956/619-A பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

% தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 21(5) விதியில் கண்ட வரம்பு நிபந்தனையை ஒட்டி சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளது.

1978 ஏப்ரல் 5]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள். ஏனைய தாள்கள்.

*214. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவிற்கான(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/78) இணைப்பு.

**215. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/78)

**216. 1978 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணு தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 24/78)

217. உடுக்குறியிடாத விணவிடை பட்டியல் (336 முதல் 395 வரை)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

---

* 31—3—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

** 4—4—1978 அன்று பேரவை முன் வைக்கப்பெற்றது.